# ஆகஸ்ட் - 19 - சனி

## புனித ஜோன் எயூட்ஸ்

**இரக்கத்தையும் நீதியையும் குறித்துப் பாடுவேன்: ஆண்டவரே, உமக்கே புகழ் சாற்றிடுவேன். திபா. 101:1**

## முதல் வாசகம் : யோசுவா24 : 14 – 29

இப்பொழுது, ஆண்டவருக்கு அஞ்சி உண்மையோடும் நேர்மையோடும் அவருக்கு ஊழியம் புரியுங்கள். நதிக்கு அப்பாலும், எகிப்திலும், உங்கள் மூதாதையர் பணிந்து வந்த தெய்வங்களை விட்டு விலகுங்கள்.ஆண்டவருக்கு ஊழியம் புரிவது தீயது என்று உங்கள் பார்வைக்குத் தோன்றினால், உங்கள் மூதாதையர் நதிக்கு அப்பால் பணிந்து வந்த தெய்வங்களுக்கோ, உங்கள் நாட்டில் உங்களுடன் வாழும் எமோரியரின் தெய்வங்களுக்கோ இவர்களுள் யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்களே இப்போது முடிவு செய்யுங்கள். ஆனால் நானும் என்வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்.மக்கள் மறுமொழியாக, "ஆண்டவரைக் கைவிட்டு வேற்றுத் தெய்வங்களை வணங்குவது எங்களிடத்தே அறவே நிகழாதிருப்பதாக!ஏனெனில் எங்கள் கடவுளாகிய ஆண்டவர் எங்களையும் எங்கள் மூதாதையரையும் அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டிலிருந்து வெளியே கொண்டுவந்தார். எங்கள் கண்முன் இப்பெரிய அடையாளங்களைச் செய்தார். நாங்கள் நடந்து வந்த எல்லா வழிகளிலும் நாங்கள் கடந்து வந்த மக்களிடையிலும் எங்களைக் காத்தருளினார்.ஆண்டவர் எல்லா மக்களையும், இந்நாட்டில் வாழ்ந்த எமோரியரையும் எங்கள் முன்னிருந்து விரட்டினார். நாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் புரிவோம். ஏனெனில் அவரே எங்கள் கடவுள்" என்றனர்.யோசுவா மக்களிடம், "உங்களால் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய இயலாது. ஏனெனில் அவர் தூய கடவுள். அவர் வேற்றுத் தெய்வ வழிபாட்டைச் சகிக்காத கடவுள். உங்கள் குற்றங்களையும் பாவங்களையும் அவர் மன்னிக்கமாட்டார்.ஆனால் நீங்கள் ஆண்டவரைக் கைவிட்டு வேற்றுத் தெய்வங்களை வணங்கினால் அவர் மீண்டும் உங்களுக்குத் தீங்கு செய்வார். உங்களுக்கு நன்மை செய்த அவர் உங்களை அழித்து விடுவார்" என்றார்.மக்கள் யோசுவாவிடம், "இல்லை, நாங்கள் ஆண்டவருக்கே ஊழியம் புரிவோம்" என்றனர்.யோசுவா மக்களிடம், "ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அவரை நீங்களே தெரிந்து கொண்டீர்கள் என்பதற்கு நீங்களே சாட்சிகள்" என்றார். அவர்கள், "நாங்களே சாட்சிகள்" என்றனர்.இப்பொழுது உங்கள் நடுவில் உள்ள வேற்றுத் தெய்வங்களை விலக்கி விடுங்கள். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரிடம் உங்கள் இதயங்களைத் திருப்புங்கள்" என்றார்.மக்கள் யோசுவாவிடம்,எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு நாங்கள் ஊழியம் புரிவோம். அவரது குரலுக்குக் கீழ்ப்படிவோம்" என்றனர்.அன்று யோசுவா மக்களுக்காக உடன்படிக்கை செய்தார். செக்கேமில் அவர் அவர்களுக்கு விதிமுறைகளையும் ஒழுங்குகளையும் கொடுத்தார்யோசுவா இவ்வார்த்தைகளைக் கடவுளின் திருச்சட்டநூலில் எழுதினார். ஒரு பெரும் கல்லை எடுத்து அதை ஆண்டவரின் திருத்தலத்தில் ஒரு கருவாலி மரத்தின் கீழ் நாட்டினார்.யோசுவா எல்லா மக்களிடமும், "இதோ! இக்கல் நமக்கு எதிரான சான்றாக இருக்கும். ஏனெனில் ஆண்டவர் நம்மோடு பேசிய எல்லாவற்றையும் இது கேட்டது. நீங்கள் உங்கள் கடவுளை ஏற்றுக்கொள்ள மறுத்தால் இது உங்களுக்கு எதிரான சான்றாக இருக்கும்" என்றார்.யோசுவா மக்களை அவரவர் உரிமைச் சொத்தாகிய பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்.இந்நிகழ்ச்சிக்குப்பின் நூனின் மகனும் ஆண்டவரின் ஊழியருமாகிய யோசுவா இறந்தார். அவருக்கு வயது நூற்றுப்பத்து.

**பதில்பாடல் :** ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து

## நற்செய்தி: மத்தேயு 19: 13 – 15

அக்காலத்தில் சிறுபிள்ளைகள் மேல் இயேசு தம் கைகளை வைத்து வேண்டுதல் செய்யுமாறு அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர்.ஆனால் இயேசு, "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" என்றார்.அவர்களைத் தொட்டு ஆசி வழங்கிய பின்பு அவர் அவ்விடத்தைவிட்டுச் சென்றார்.

**தியானம்:** இந்த உலகம் பலவிதத்திலே துன்பப்படுகின்றது. துன்பத்திற்கு அடிப்படையில் மனிதனுடைய பாவமும், சுயநலமும் தலை விரித்தாடுகின்றது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மக்களிடம் பாவம் பெருக்கெடுத்து ஓடியபொழுது கடவுளுடைய கோபம் மக்கள் மீது எழுந்தது. நோவா தொடக்கம் ஆபிரகாம், மோயீசன் இவர்களுடைய காலத்தில் மக்களின் பாச்செயலால் இறைவன் அவர்களுக்கு பல்வேறு தண்டனைகளை அளித்து வந்துளதை நாம் வரலாற்றினூடாக காண்கின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் யோசுவா காலத்தில் வேற்றுத் தெய்வங்களை வணங்கியும். அவற்றிற்கு ஊழியம் செய்யும் மக்களுக்கு யோசுவா அறிவுரை கூறி, ஆண்டவருக்கு ஏற்றவகையில் வாழ்க்கையை அமைக்கும்படி அறிவுறுத்துவதைக் காண்கின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் சிறுபிள்ளகைளைப்போல் இருப்பவர்களுக்குத்தான் விண்ணரசு உரியது என்று இயேசு கூறுகின்றார். பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையில்லை. அவை இருந்தால்தான் வாழ்க்கையில் சுவையிருக்கும், படிப்பினையிருக்கும். வாழ்க்கை ஒரு விளையாட்டு. காலையில் எம் கையால் வீசியெறும் பந்து மாலையில் திரும்பிவந்து நம்முகத்தை காயப்படுத்தும். உற்சாகத்துடன் இருந்தால்தான் உதட்டில் புன்னகை பிறக்கும். சிரித்துக்கொண்டு இருப்பவர்களுக்கு இவ்வாழ்க்கை சொர்க்கம். கள்ளம் கபடு அற்ற சிறுவர்களுக்கு வெற்றி தோல்வி இரண்டும் சமமானது. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் உயிர்த்தவர் உயிரோடு வாழ்கின்ற கிறிஸ்துவை, கண்முன்பாக வைத்து வாழ்பவர்கள் விண்ணரசுக்குள் நாம் நுழைவதற்கு எம்மனதை சிறுவர்களைப போலாக்க வரம்வேண்டுவோம்.